செய்தி வெளியீட்டு எண்– 213 நாள் 18.03.2008

# கிராமக் கோயில் பூசாரிகள் நல வாரியம் கூட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் பொறுப்பேற்ற இவ்வரசு இந்துசமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத கிராமப்புற திருக்கோயில்களில் பணிபுரியும் பூசாரிகளின் நலனை பேணி பாதுகாப்பதை கருத்தில் கொண்டு ''கிராமக் கோயில் பூசாரிகள் நல வாரியம்'' அமைத்து 23.1.2007 அன்று உத்தரவிட்டது. இவ்வாரியத்தின் தலைவராக மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களையும், 9 அலுவல் சார்ந்த மற்றும் 10 அலுவல் சாராத உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

இவ்வாரியத்தின் கூட்டம் இன்று (18.03.2008) சென்னை 34, நுங்கம்பாக்கம், இந்துசமய அறநிலையத்துறை, ஆணையர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர், கூடுதல் ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, கூடுதல் ஆணையர் நில நிர்வாகத்துறை,துணைச் செயலர், நிதித்துறை, துணைச் செயலர் வருவாய்த்துறை, சார்புச் செயலர், சமூகநலத்துறை, துணை ஆணையர், தொழிலாளர் நலத்துறை, இணை ஆணையர்( திருப்பணி) இந்து சமய அறநிலையத்துறை ஆகியோரும் அலுவல் சாரா உறுப்பினர்களான திரு ஏ.கே.சௌந்தரராஜன், திரு சி.கனகராசன், திரு ஆர்.மாரியப்பன், திரு எம்.ராஜாமணி, திரு ஆ.பி.வி.எஸ்.மணியன், திரு கண் நடராஜன், திரு பட்டாபி பூசாரி, திரு நடராஜன் பூசாரி, திரு நெ.இல.சீதரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கிராமக்கோயில் பூசாரிகளை உறுப்பினர்களாகப் பதிவு செய்வது, அவர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை வழங்குவது முதலான பல்வேறு பொருட்கள் குறித்து விவாதித்து முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.